**செய்தி வெளியீடு எண் : 1319** **நாள் : 06.07.2023**

**மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் வட சென்னை அனல் மின் திட்டம் நிலை – 3 பணிகளை ஆய்வு செய்தார்**

இன்று (06.07.2023) மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் வட சென்னை அனல் மின் திட்டம் நிலை – 3 (1 x 800 மெகாவாட்) திட்டப் பணிகளை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., இயக்குநர் (திட்டம்) திரு.எம். ராமசந்திரன், இயக்குநர் (உற்பத்தி) திரு.த.இராஜேந்திரன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வட சென்னை அனல் மின் திட்டம் நிலை –3ல் நடைபெற்று வரும், கீழ்கண்ட கட்டுமான பணிகளை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு விவரங்களை கேட்டறிந்தார்.

1. சாம்பல் கையாளும் பகுதி.
2. குளிரூட்டும் நீரேற்று நிலையம் மற்றும் குளிரூட்டும் கோபுரம்.
3. நிலக்கரி கொண்டு செல்லும் பகுதி.
4. கூடுதல் நிலக்கரி கையாளும் கன்வேயர்.
5. சுழலி மற்றும் அதை சார்ந்த எந்திரங்கள்.

மேற்கண்ட பகுதிகளின் எஞ்சிய பணிகள் மற்றும் கொதிகலனிலிருந்து சுழலிக்கு நீராவி கொண்டு செல்லும் குழாய்களை சுத்தம் செய்யும் பணிகள் முடிக்கப்பெற்று, சுழலி மின்னாக்கி இயக்கத்திற்கு கொண்டுவரப்படும் என்றும், மின் உற்பத்தியை மின் தொகுப்பில் இணைத்து பயன்பாட்டிற்கு கொண்டு செல்ல தேவையான மின் கோபுரங்கள் அமைக்கும் பணிகள் விரைவில் முடிவடையும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேரடி கள ஆய்விற்கு பின், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு கூட்டம் நடத்தினார்கள். அதில் திட்டப் பணிகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆண்டு அக்டோபர் மாத இறுதிக்குள் பணிகள் நிறைவுற்று மின் உற்பத்தியை தொடங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், திட்டத்தின் மற்ற இதர பணிகளான கரி கையாளும் அமைப்பு, சாம்பல் கையாளும் அமைப்பு ஆகியவற்றை கூட்ட அரங்கில் ஆலோசனை மேற்கொண்டார், மேலும் அதிகரித்து வரும் தேவையை கருத்தில் கொண்டு திட்டத்தை விரைந்து முடிப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு வாரிய அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

**பின்னர், மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில்,**

வட சென்னை அனல் மின் திட்டம் நிலை–3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2010–ஆம் ஆண்டு 800 மெகாவாட் அளவிற்கு அனல் மின் நிலையத்தின் திட்டம் அறிவிக்கப்பட்டது. 2019–ஆம் ஆண்டு இத்திட்டப் பணிகள் முடிந்து உற்பத்தியை தொடங்கியிருக்க வேண்டும்.

சூப்பர் கிரிட்டிகள் தெர்மல் பவர் பிளாண்ட் மிக உய்ய மின் நிலையத் திட்டப் பணிகளை ஆய்வு செய்தேன். இந்த திட்டம் மிக முக்கியமான மின்சார உற்பத்தி திட்டங்களில் ஒன்று. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "ஐகானிக்" திட்டம் என்று அறிவிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்ட உயரிய திட்டம். இந்த திட்ட பணிகள் எந்தளவிற்கு இருக்கிறது உடனடியாக இதனை முடித்துவிட்டு செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் மேற்கொண்ட ஆய்விலே அறிவுறுத்தியிருந்தார்கள்.

அதனுடைய அடிப்படையில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களும், நானும் மற்றும் உயர் அதிகாரிகளும் மின்சார உற்பத்தி நிலையத்தில் நடைபெற்று கொண்டிருக்கின்ற பணிகளை ஆய்வு செய்திருக்கிறோம். மிக விரைவில் குறித்த காலத்திற்குள் இதை முடிக்க வேண்டும் என்றும் ஒப்பந்ததாரர்களிடத்திலே நாங்கள் அறிவுறுத்தியிருக்கிறோம், அவர்களும்

விரைவாக முடிப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள். நாங்கள் கடந்த ஆய்வுக்கூட்டத்தில் சொன்னதைப் போல் அக்டோபர் மாதத்திற்குள் முடிப்பதற்கான முயற்சிகளை எடுப்போம்.

எங்கெங்கே பிரச்சனைகள் இருக்கிறது, ஒப்பந்ததாரர்கள் எந்த அளவிலே அந்த பிரச்சனைகளை உடனடியாக சரிசெய்ய வேண்டும், இந்த பணிகளின் தாமதம், ஒட்டுமொத்தமாக இந்த திட்டத்தினுடைய முடிவு தேதியை பாதிக்கிறது, யார் என்னென்ன வேலைகளை உடனடியாக செய்ய வேண்டும், யார் அதற்கு பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதையெல்லாம் கண்டறிந்து ஆய்வு மேற்கொண்டு எந்த தாமதமும் ஏற்படாமல் மிக விரைவிலே இந்த பணிகளை முடித்து இந்த மின் திட்டத்தை செயல்பாட்டிற்கு கொண்டு வருவோம்.

இவ்வாறு மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

மேலும், அமைச்சர் அவர்கள் வட சென்னை அனல் மின் திட்டம் நிலை I, நிலை II மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் காமராஜர் துறைமுகத்தில் கப்பலிலிருந்து நிலக்கரி இறக்கும் பணிகளையும் ஆய்வு செய்தார். பின்னர், உலர் சாம்பல் இறக்கும் பகுதியினையும் ஆய்வு செய்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in